අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/5/14

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024. 11. 29

சுற்றுநிருபத்தின் இலக்கம் : 36 / 2024

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டக் கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து அதிபர்கள்

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சு மற்றும் இணைந்து டவர் மண்டப அரங்கேற்ற மன்றம் மூலம் 30 வது முறையாக ஏற்பாடு செய்துள்ளஅகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான நாடகப் போட்டி – 2024/ 2025**

**01 அறிமுகம்:**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சு இணைந்து, டவர் மண்டப அரங்கேற்ற மன்றம் நூர்த்தி நாடகக் கலையின் மேன்மை மற்றும் நீண்ட தொடர் நாடகங்களின் மேன்மைக்காகவும் படைப்பாற்றல் மிக்க ஞானமுள்ள பிரஜைகளை உருவாக்கும் நோக்கத்தில் வருடாந்தம் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான நாடகப் போட்டியை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்களிடத்தில் பாடல், இசை, நாடகம் மற்றும் நடிப்புத் துறைகளில் காணப்படும் திறமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் பொதிந்திருக்கும் கலைத்துறையிலான படைப்பாற்றல் திறமைகளை அறிந்து கொள்வதோடு இலங்கையின் பாரம்பரிய சிங்கள மற்றும் தமிழ் நாடகத் துறை தொடர்பான அறிவு மற்றும் புரிதலை அவர்களுக்கு பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுக்கும். இத்தகைய செயற்பாடுகள் நாடகம் மற்றும் நடிப்புத் துறையின் எதிர்கால சுபீட்சத்துக்கு பாரிய ஊன்றுகோலாக அமையும். இது தொடர்பாக கடமையாற்றும் ஆசிரியர்களின் படைப்பாற்றல்களும் இந்தப் போட்டியால் வெளிப்படுத்தப்படும்.

இந்த அகில இலங்கை நாடகப் போட்டியானது ஆயிரக்கணக்கான படைப்பாற்றல் மிக்க பாடசாலை மாணவ மாணவிகளை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க அறிமுகப்படுத்திய ஓர் போட்டியாகும். 80 ஆம் ஆண்டுகளில் இருந்து தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டு வரும் இந்தப் போட்டியை, டவர் மண்டப அரங்கேற்ற மன்றம் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சு இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

இம்முறை இந்த போட்டிகள் 30 வது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**02 நோக்கங்கள்:**

2:1 சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பாடசாலைகளில் நூர்த்தி மற்றும் நாடகக் கலையை மேம்படுத்துதல்.

2:2 மாணவர் சமூகத்தின் படைப்பாற்றல், ஆளுமை வளர்ச்சி, அறிவு, விழுமியங்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்.

2:3 படைப்பாற்றல் மிக்க ஞானத்தில் நிறைந்த நல்லொழுக்கமுள்ள பிரஜைகளை நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

2:4 மாகாண மட்டத்தில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் மற்றும் விருது வழங்கும் விழாவில் சான்றிதழ் வழங்கி பாராட்டுதல்.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

2:4 மாகாண மட்டத்தில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் மற்றும் விருது வழங்கும் விழாவில் சான்றிதழ் வழங்கி பாராட்டுதல்.

2:5 தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள், விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டுதல்.

**03 போட்டிப் பிரிவுகள்:**

3:1 சிங்கள மொழிப் பாடசாலைகளுக்கு

3:1:1 நடன நாடகங்கள்
3:1:2 குறும் நாடகங்கள்
3:1:3 நீண்ட நாடகங்கள்

3.2 தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு

3:2:1 இசை நாடகங்கள்
3:2:2 குறும் நாடகங்கள்
3:2:3 நீண்ட நாடகங்கள்

**04 போட்டிகளுக்கான நிபந்தனைகள்:**

4:1 நடன நாடகங்கள் பிரிவு

4:1:1 சிங்கள மொழியில் இந்த நாடகப் போட்டி நடைபெறும்.

4:1:2 பின்வரும் தலைப்புகளில் ஒன்றை தேர்ந்தெடுத்து, உரையாடல்கள் மற்றும் பாடல்கள் அடங்கிய தொடர்ச்சியான நாடகமொன்றின் ஒரு பகுதியை பொருளடக்கமின்றி தயாரிக்கப்பட்ட நாடக நிகழ்வொன்று வழங்கப்பட வேண்டும்.

(அ) சட்டத்தரணி ஜோன் டி சில்வா அவர்களின் ஸ்ரீ விக்கிரம, சிரிசங்கபோ, வெஸ்சந்த்தர மற்றும் ராமாயணம்

(ஆ) சார்ல்ஸ் டயஸ் அவர்களின் விதுர மற்றும் பத்மாவதி

4:1:3 திரைஅழைப்பு (Curtain Call) தவிர நேரம் 25--30 நிமிடங்களாக இருக்க வேண்டும்.

4:1:4 புதிய நாடக நுட்பங்களைப் பயன்படுத்த இடமிருக்கின்றது. ஆனால் பாரம்பரிய வடிவத்தைப் பாதுகாத்துக் கொண்டு படைப்புகளை முன்வைப்பது அவசியம்.

4:1:5 தயாரிப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட குறித்த நடன நாடகங்களின் பகுதி உட்பட்ட எழுத்து மூல பிரதியை மாகாண மட்டத்திலும் இறுதிச் சுற்றிலும் நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4:2 இசைநாடகப் பிரிவு

4:2:1 தமிழ் மொழியில் இந்த நாடகப் போட்டி நடைபெறும்.

4:2:2 நவ திரு சங்கிரதாஸ் சுவாமிகள் அவர்களால் எழுதப்பட்ட வள்ளி திருமணம், ஹரிச்சந்திர மயானகண்டம், சத்தியவான் சாவித்ரி, பவளக் கொடி, அல்லி அர்ச்சுணா, புதத்தம்பி, பக்த நந்தர், எழு பில்லே நல்லதங்கால் ஆகிய பரிந்துரைக்கப்பட்ட நூல்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து உரையாடல்கள் மற்றும் பாடல்கள் அடங்கிய தொடர்ச்சியான நாடகமொன்றின் ஒரு பகுதியை பொருளடக்கமின்றி தயாரிக்கப்பட்ட இசைநாடக நிகழ்வொன்று சமர்ப்பிக்க வேண்டும்.

4:2:3 திரைஅழைப்பு (Curtain Call) தவிர நேரம் 25--30 நிமிடங்களாக இருக்க வேண்டும்.

4:2:4 புதிய நாடக நுட்பங்களைப் பயன்படுத்த இடமிருக்கிறது. ஆனால் பாரம்பரிய வடிவத்தைப் பாதுகாத்துக் கொண்டு படைப்புகளை முன்வைப்பது அவசியம்.

4:2:5 தயாரிப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இசை நாடகத்தின் ஒரு பகுதி உட்பட்ட எழுத்து மூல பிரதியை மாகாண மட்டத்திலும் இறுதிச் சுற்றிலும் நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4:3 **குறும் நாடகங்கள் (சிங்கள மற்றும் தமிழ் மொழித் பாடசாலைகளுக்கு)**

4:3:1 சிங்கள மற்றும் தமிழ் மொழிகளால் எழுதப்பட்ட, பாடசாலை மாணவ மாணவர்களின் ஆளுமையை மேம்படுத்த துணைபுரியும் மனதைக் கவரும், மற்றும் பாடசாலை அமைப்புடன் ஒத்துப்போகும் ஆக்கப்பூர்வமான பிரதிகளாகவும் கட்டுரை வடிவிலமைந்த தயாரிப்பாகவும் இருக்க வேண்டும்.(இது சிறுவர் நாடகமாக அமையக் கூடாது)

4:3:2 மொழிபெயர்ப்புகள் அல்லது தழுவல்களை முன்வைக்க முடியாது.

4:3:3 புதிய நாடக நுட்பங்கள், கலை நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தப்படலாம்.

4:3:4 திரைஅழைப்பு (ஊரசவயயை ஊயடட) தவிர நேரம் 25-30 நிமிடங்களாக இருக்க வேண்டும்.

4:3:5 யு4 தாளின் ஒரு தனிப்பக்கத்தில் மாத்திரம் தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கணினி மயப்படுத்தப்பட்ட அல்லது தெளிவான கையெழுத்துடன் கூடிய நாடகப் பிரதியை மாகாண மட்டத்திலும் இறுதிச் சுற்றிலும் நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4:4 நீண்ட நாடகப் பிரிவு

4:4:1 மேற்கூறிய 4:3:1, 4:3:2 மற்றும் 4:3:3 என்பன இதற்கும் செல்லுபடியாகும்.

4:4:2 திரைஅழைப்பு (ஊரசவயயை ஊயடட) தவிர நேரம் 60--90 நிமிடங்களாக இருக்க வேண்டும்.

05 **போட்டிகளுக்கான பொது நிபந்தனைகள்::**

5:1 ஒரு பாடசாலை அனைத்து போட்டிகளிலும் பங்கேற்கலாம். அப்படியாயின் விண்ணப்பப் படிவத்தின் பிரதிகளைப் பயன்படுத்தி தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

5:2 எந்தவொரு படைப்புக்கும் பங்குபற்றக் கூடிய **குறைந்தபட்ச கலைஞர்களின் எண்ணிக்கை 03** ஆக இருக்க வேண்டும். அத்தோடு அவ்வெண்ணிக்கை 40 க்கு அதிகமாக இருக்கக் கூடாது. நாடகத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

5:3 ஒரு நாடகத்தில் ஈடுபடுத்தப்படும் கலைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், **அதற்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களை எழுத்து மூலம்** சமர்ப்பித்து மாகாண மட்டத்திலான முடிவுகளுக்கு முன் டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5:4 மாகாண மட்டத்தில் நாடகங்களை காட்சிப்படுத்த முன் பொறுப்பான ஆசிரியர் ஏதேனும் காரணத்தினால் வேறொரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று சென்றிருந்தால் இரு பாடசாலைகளினதும் அதிபர்களின் விருப்பத்தின் படி விண்ணப்பதாரர் விரும்பும் பாடசாலையிருந்து தனது நாடகத்தை முன்வைக்கலாம். ஆனால். அது தொடர்பாக இரு அதிபர்களிடமிருந்தும் இணக்கப்பாட்டினை எழுத்து மூலம் குறித்த அதிபர் மூலம் டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5:5 வேறொரு நாடகப் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நாடகத்தின் ஏதேனும் சிறிய அல்லது நீண்ட பிரதியை இந்த போட்டிக்கு சமர்ப்பிக்கப்படக் கூடாது. அத்தோடு மற்றொருவருடைய பிரதி அல்லது மாற்றியமைக்கப்பட்ட பிரதியை பிழையான வகையில் முன்வைத்திருந்தால் அது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்து போட்டியிலிருந்து அந்த நாடகத்தை நிராகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் , அத்தகைய செயற்பாடுகள் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

5:6 இந்த போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் நாடகத்தை மற்றுமாரு போட்டிக்கும் சமர்ப்பித்தால் **அந்த போட்டிக்கு சமர்ப்பிக்க முன்** டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5:7 ஒவ்வொரு நாடகத்தினதும் பணிப்பாளர் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் பாடசாலையின் ஆசிரியராக இருக்க வேண்டியது முக்கியமாகும். மேலும் உதவி பணிப்பாளர் உட்பட ஒவ்வொரு பிரிவிற்கும், அதே பாடசாலையின் மாணவ மாணவிகளை மட்டுமே சேர்த்துக் கொள்ள வேண்டும். இசைக்குழுவுக்கு மாத்திரம் வேறொரு பாடசாலையின (இரு பாடசாலைகளினதும் அதிபர்களின் இணக்கத்துக்கமைய) ஒரு மாணவன் அல்லது மாணவியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

5:8 அனைத்து போட்டி மட்டங்களிலும் வழங்கப்படும் திகதியிலும் உரிய நேரத்திலும் கட்டாயம் தமது நாடகத்தை தீர்ப்புகளுக்கு சமர்ப்பிப்பது பணிப்பாளரின் பொறுப்பாகும்.

5:9 மாகாண மட்டத்திலான போட்டிக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்ட பாடசாலையில் இருந்து அல்லது நாடக ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேடையிலிருந்து குறித்த நாடகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த நாடகத்தை பொதுமக்கள் பார்வைக்கும் முன்வைக்க அவகாசமிருப்பதோடு அங்கு நடுவர் குழுவிற்கு முன்வரிசையில் 05 இருக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும்.

5:10 இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நாடகம் கொழும்பிலுள்ள டவர் மண்டபத்தில் அல்லது எல்.ஃபிஸ்டன் அரங்கேற்ற மண்டபத்தில் அரங்கேற்றப்படும்.

5:11 **விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட பிறகு ஒவ்வொரு நாடகத்தினதும் தயாரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.**

5:12 மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் மீறப் பட்டால் அந்த நாடகத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போட்டியிலிருந்து நீக்கும் உரிமை டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்துக்கு உண்டு.

5.13 போட்டிகளை ஏற்பாடு செய்தல், நடுவர் குழுவின் நியமனம், தீர்ப்புகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது, போட்டியின் நிபந்தனைகளை மீறல் மற்றும் போட்டிகளை ஒழுங்கமைத்தல் தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் உரிமை டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்துக்கு உண்டு.

5:14 சிறந்த தயாரிப்பிற்கான முதலிடம், இரண்டாம் இடம், மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற நாடகத்தை அரங்கேற்றிய பாடசாலையின் பெயரில் காசோலை வழங்கப்படும்.

5:15 நடுவர் குழுவின் தீர்ப்பு இறுதியானதும் உறுதியானதுமாகும்.

**06 போட்டிகள் நடத்தப்படும் முறை:**

**6:1 முதல் கட்டம் – விண்ணப்பங்களுக்கான அழைப்பு மற்றும் ஒரு நாள் மாநாடு**

6:1:1 டவர் மண்டப அரங்கேற்ற மன்றம், புத்தசாசன, மதம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சு உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் மூலமும் டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்தும் சுற்றறிக்கைகள மற்றும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

டவர் மண்டப அரங்கேற்ற மன்றம் - www.towerhall.lk
புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு - www.mbs.gov.lk
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சு - www.moe.gov.lk

6:1:2 **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**பணிப்பாளர் நாயகம்**
**டவர் மண்டப அரங்கேற்ற மன்றம்,**
**சவ்சிரிபாய, 123, விஜேராம மாவத்த, கொழும்பு 07.**

6:1:3 **விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 2025 ஜனவரி 17ஆகும்.**

6:1:4 அனைத்து நாடகப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், மற்றும் துணைக் கலைஞர்களுக்கான ஒருநாள் மாநாடொன்று 2025 பெப்ரவரி ம்ாதம் முதலாவது வாரத்தில் நடைபெறும்.

6:1:5 அனைத்து நாடகப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், மற்றும் துணைக் கலைஞர்கள் இம்மாநாட்டில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

6:2 **இரண்டாம் கட்டம் – மாகாண மட்டத்திலான போட்டி முடிவுகள்**

6:2:1 முதல் கட்டத்தில் மாநாட்டில் கலந்து கொண்ட பாடசாலைகளின் நாடகங்கள் இதில் பங்குபற்ற தகுதியுடையவையாகும்.

6:2:2 மாகாணப் போட்டி முடிவுகள் 2025 மார்ச்/ஏப்பிரல் மாதங்களுக்கு இடையில் நடைபெறும்.

6:2:3 இந்தப் போட்டியில் முன் வைக்கப்படும் நாடகங்களுக்கிடையே இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறாத நாடகங்களில் தமது திறமையை வெளிக்காட்டியவர்களுக்கு மாத்திரம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

6:2:4 போட்டி இலக்கம் 06 கீழ் மாகாண மட்டத்தில் அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட தலா 10 சிங்கள நாடகங்களும் தமிழ் பிரிவில் 10 நாடகங்களும் என்ற வகையில் 60 நாடகங்கள் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறுவதோடு முழுமையான தயாரிப்பு இங்கு எதிர்பார்க்கப்படும.

6:2:5 ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணத்தினால் இம்முறை போட்டிகளுக்கு முன்னிலையாக முடியாதிருந்தால் அதுபற்றி தீர்மானமெடுக்க 07 நாட்களுக்கு முன்பாக டவர் மண்டப அரங்கேற்ற மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

6:3 **மூன்றாவது கட்டம் – இரண்டு நாள் செயலமர்வு**

6:3:1 இறுதிச்சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்களின் நாடகப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், மற்றும் துணைக் கலைஞர்களுக்கு 2025 மே மாதத்தில் இந்த செயலமர்வு நடைபெறும்.

6:3:2 அங்கீகரிக்கக் கூடிய காரணத்தினால் இச்செயலமர்வில் நாடகப் பணிப்பாளர் அல்லது ஏனைய துறைகளைப் பீரதிநிதித்துவப்படுத்தும் மாணவன் அல்லது மாணவிக்கு சமூகமளிக்க முடியாவிட்டால் , அதற்காக நாடகத்தோடு தொடர்புடைய மற்றுமொரு ஆசிரியர் அல்லது மாணவரொருவர் சமூகமளிக்க வேண்டும். இந்த செயலமர்வில் பங்கேற்காத நாடகம் இறுதிச் சுற்றில் நீக்கப்படும்.

6:3:3 இந்த செயலமர்வு நாடகத்தோடு சம்பந்தப்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் பணிப்பாளர்களுக்கு மட்டுமே நடத்தப்படுகின்றது.

6:4 **நான்காவது கட்டம் – இறுதிச் சுற்று**

6:4:1 இந்த கடைசிச் சுற்று 2025 ஜுன/ ஜுலை மாதங்களில் மருதானை, டவர் அல்லது எல்.ஃ.பிஸ்டன் அரங்கேற்ற மண்டபத்தில் நடைபெறும்.

6:4:2 இதில் பங்குபற்றும் அனைத்து நாடகங்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

6:4:3 இந்தச் சுற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து நாடகங்களுக்கும் சலுகையுடனான போக்குவரத்துக் கொடுப்பனவாக ரூ. 7,500/- உதவித் தொகையும் வழங்கப்படும்.

6:4:4 போட்டிச் சுற்றுக்களின் போது மதிப்பெண்களின் மட்டத்தை பூரணப்படுத்தாத படைப்புக்கள் அல்லது தனிநபர்களின் திறமைகள் சிறப்பாக அமையாவிட்டால் அதற்குரிய பரிசுகள் மற்றும் விருதுகளை பரிந்துரைக்காதிருக்க நடுவர் குழுவிற்கு உரிமையுண்டு.

6:5 **ஐந்தாவது கட்டம் – பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்கல்**

6:5:1 2025 டிசம்பர் மாதத்தில் கொழும்பில் இவ்விழா நடைபெறும்.

6:5:2 இந்த விழாவிற்கு மாணவ மாணவிகள் பாடசாலை சீருடையிலும் ஆசிரியர்கள் விழாவின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் பொருத்தமான உடையிலும் சமூகமளிப்பது கட்டாயாகும்.

6:5:3 பணப் பரிசுகளுக்கு மேலதிகமாக விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

6:5:4 முக்கிய பரிசுகள் மற்றும் விருதுகளுக்கு மேலதிகமாக முன்னிலைப்படுத்தப்படும் நாடகங்கள் நடுவர் மன்றத்தின் பாராட்டுதல்களுக்கு பாத்திரமானால் அதற்காகவும் பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்கப்படும்.

07 **பரிசுகள் மற்றும் விருதுகள்:**

| போட்டி நிகழ்வு | நூர்த்தி காட்சிகள் ( சிங்கள மொழி) இசை நாடகம் ( தமிழ் மொழி) | குறும் நாடகம் (சிங்கள மற்றும் தமிழ் மொழி) | நீண்ட நாடகம் (சிங்கள மற்றும் தமிழ் மொழி |
|---|---|---|---|
| சிறந்த இசை அமைப்பாளர் | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |
| சிறந்த மேடைப் பின்னணி வடிவமைப்பு | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |
| சிறந்த அரங்கேற்ற ஆடை வடிவமைப்பு | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |

| | | | |
|---|---|---|---|
| சிறந்த கதையாக்கம் | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |
| சிறந்த நாடகத் தயாரிப்பு | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |
| சிறந்த துணை நடிப்பு (நடிகை) | ரூ. 10,000.00 | ரூ. 10,000.00 | ரூ. 10,000.00 |
| சிறந்த துணை நடிப்பு (நடிகர்) | ரூ. 10,000.00 | ரூ. 10,000.00 | ரூ. 10,000.00 |
| சிறந்த நடிப்பு (நடிகை | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |
| சிறந்த நடிப்பு (நடிகர்) | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 |
| சிறந்த நாடகப் பிரதி 3ஆம் இடம் | -- | ரூ. 10,000.00 | ரூ.15,000.00 |
| சிறந்த நாடகப் பிரதி 2ஆம் இடம் | - | ரூ. 15,000.00 | ரூ. 20,000.00 |
| வருடத்தின் சிறந்த பிரதி | - | ரூ. 20,000.00 | ரூ. 25,000.00 |
| சிறந்த இயக்குனர் | ரூ. 15,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 20,000.00 |
| ஆண்டின் சிறந்த உதவி இயக்குனர் | ரூ. 10,000.00 | ரூ. 10,000.00 | ரூ. 10,000.00 |
| சிறந்த நாடகத் தயாரிப்பு 3ஆம் இடம் | ரூ. 20,000.00 | ரூ. 10,000.00 | ரூ. 20,000.00 |
| சிறந்த நாடகத் தயாரிப்பு 2ஆம் இடம் | ரூ. 25,000.00 | ரூ. 15,000.00 | ரூ. 25000.00 |
| சிறந்த நாடகத் தயாரிப்பு 1 ஆம் இடம் | ரூ. 30,000.00 | ரூ. 20,000.00 | ரூ. 30,000.00 |

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்விஅமைச்சு மற்றும் டவர் மண்டப அரங்கேற்ற மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நூர்த்தி மற்றும் நாடக போட்டியை வெற்றியடையச் செய்வதில் நீங்கள் வழங்கிய ஒத்துழைப்பை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

நாலக கலுவெவ
செயலாளர்